# رسالة واحدة فقط

تأليف

د. ناجي بن إبراهيم العرفج

# ஒரேயொரு தூதுச் செய்தி!

அரபி மூலம்: கலாநிதி நாஜீ அல்அர்ஃபஜ்

தமிழில்: அப்துல் மஜீத் உமரீ

التاميلية

سلطانة
Sultanah

# رسالة واحدة فقط

(باللغة التاميلية)

# ஒரேயொரு தூதுச் செய்தி!

அரபி மூலம்: கலாநிதி நாஜீ அல்அர்ஃபஜ்
தமிழில்: அப்துல் மஜீத் உமரீ

ح المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالاحساء، ١٤٢٨ هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

العرفج ، ناجي بن إبراهيم

رسالة واحدة فقط باللغة التاميلية / ناجي بن إبراهيم العرفج – الاحساء ، ١٤٢٨هـ

٣٦ ص ؛ ١٢ X ١٧ سم

ردمك : ٣-١-٩٩٧٥-٩٩٦٠-٩٧٨

١– التوحيد أ– العنوان

ديوي ٢٤٠ ١٤٢٨/٤٨٧٠

رقم الايداع: ١٤٢٨/٤٨٧٠

ردمك: ٣-١-٩٩٧٥-٩٩٦٠-٩٧٨

رســــالة واحـــدة فقـــط (باللغـــة التامـــيلـيـــة)

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருநாமத்தால்...

உண்மையைக் கண்டறியும்
ஆய்வுத் தொடர் (3)

# ஒரேயொரு தூதுச் செய்தி!

- *விரிவான - விளக்கமான முறையில்...*

இப் பிரசுரம், ஆதாம் தீர்க்கதரிசி முதல் முஹம்மத் தீர்க்கதரிசி வரை சுமந்து வந்த இறையேகத்துவம் என்ற தூதுச் செய்தியைப் பற்றி பேசுகிறது.

- *வித்தியாசமான முறையில்...*

யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் வேதங்களான முறையே பழைய ஏற்பாடு, மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய புனித வேதாகமங்களின் தற்போது புழக்கத்தி லுள்ள பிரதிகளிலிருந்து இறையேகத்து வத்தை எடுத்துக் கூறும் சான்றுகளை மேற்கோள் காட்டுவது.

# சமர்ப்பணம்

- மனத்தூய்மையோடும் வாய்மையோடும் உண்மையை அறியத்துடிக்கும் ஆர்வலர்களுக்கும்
- அறிவு ஜீவிகளுக்கும்

# உள்ளே...



| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | வாசிப்பதற்கு முன்பு | 4 |
| 2 | தலைப்பின் சாராம்சம் | 5 |
| 3 | பழைய ஏற்பாட்டில் | 20 |
| 4 | புதிய ஏற்பாட்டில் | 22 |
| 5 | புனித குர்ஆனில் | 24 |
| 6 | முடிவுரை | 26 |
| 7 | இறுதிச் சிந்தனை | 34 |

# வாசிப்பதற்கு முன்பு சில கேள்விகள்:

1) "ஒரேயொரு தூதுச் செய்தி" என்பதன் பொருள் யாது?
2) இதைப் பற்றி புனித வேதாகமம் கூறுவதென்ன?
3) இதைப் பற்றி புனித குர்ஆன் கூறுவதென்ன?
4) இதைப் பற்றி உங்களின் அபிப்பிராயமென்ன?

## தலைப்பின் சாராம்சம்:

ஆதாம் படைக்கப்பட்டதற்குப் பின்பு மனித வரலாற்றின் வாயிலாக ஒரேயொரு அடிப்படைத் தூது மனித சமூகத்தின் மீது சுமத்தப்பட்டது. இத்தூதுச் செய்தியைப் பற்றி மக்களுக்கு நினைவூட்டுவதற்காகவும் அவர்களை நேரான வழியின்பால் இட்டுச் செல்வதற்காகவும் ஏக இறைவன் ஆதாம், நோவா, ஆப்ரஹாம், மோஸே, இயேசு, முஹம்மத் போன்ற தூதர்களைத் தேர்ந்தெடுத்தான். அந்தச் செய்தி இதுதான்:

**உண்மையான இறைவன் ஒரேயொருவன் மட்டுமே! எனவே அவனையே வணங்குங்கள்!**

## உண்மையான ஒரே இறைவன்! (படைக்கக்கூடியவன்)

| தேர்ந்தெடுத்துள்ளான்: | இத்தூதுச் செய்தியைப் பரப்புவதற்காக |
|---|---|
| ...... நோவா | கர்த்தர் ஒருவரே! |
| ...... ஆப்ரஹாம் | கர்த்தர் ஒருவரே! |
| ...... மோஸே | கர்த்தர் ஒருவரே! |
| ...... இயேசு | கர்த்தர் ஒருவரே! |
| ...... முஹம்மத் | கர்த்தர் ஒருவரே! |

# இறைவன் பல தூதர்களைத் தேர்ந்தெடுத்தது பல முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக! அவை:

1- இறைவனிடமிருந்து இறைச் செய்தியைப் பெற்று அதனைத் தங்களின் சமூகங்களுக்கு எடுத்துரைப்பது

2- மக்களுக்கு இறையேகத்துவத்தை இறைவனுக்கு மட்டுமே வணக்க-வழிபாட்டைக் கலப்பற்றதாய் செலுத்த வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுத்தல்

3- மக்கள், இறைவனை அடையும் வழியில் சொல்லாலும் செயலாலும் பின்பற்றுவதற்கு ஏதுவாய் தங்களை அழகிய முன்மாதிரிகளாக உருவாக்குவது,

4- தங்களைப் பின்பற்றுவோரை இறையச்சம், வழிபாடு மற்றும் கட்டளைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றின்பால் வழிகாட்டுவது.

5- தங்களைப் பின்பற்றுவோருக்கு சன்மார்க்க - சீர்திருத்தச் சட்டங்களையும் நற்குணங்களையும் போதிப்பது

6- பாவிகளுக்கும் விக்ரக வணக்கங்களில் ஈடுபடுவோரைப் போன்ற இணைவைப்போருக்கும் நேர்வழி காட்டுவது

7- மனிதர்கள் யாவரும் மரணித்து விட்ட பிறகு மறுமை நாளில் எழுப்பப்பட்டு அவரவர்களின் செயல் பாடுகள் பற்றி விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்; யார் ஏக இறைவனை விசுவாசம் கொண்டு நல்லறங்கள் புரிந்தாரோ அவருக்கு சுவனம் சன்மானமாகக் கிடைக்கும்; யார் ஏக இறைவனுக்கு இணைக் கற்பித்து பாவமிழைக்கின்றானோ அவனுடைய தங்குமிடம் நரகமாகும் - என்ற செய்தியை மக்களுக்கு எடுத்துரைத்தல்

நிச்சயமாக இறைத்தூதர்கள் அனைவரையும் அந்த ஒரே இறைவன்

தான் படைத்தான். அவனே தான் அவர்களைத் தூதர்களாகத் தேர்ந்தெடுக்கவும் செய்தான். உலகின் படைப்பினங்கள் அத்தனையுமே, தங்களைப் படைத்தவன் ஒருவன் இருக்கிறான் என்ற உண்மையைப் பறைசாற்றிக்கொண்டு அவன் ஓரேயொருவன்தான் என்பதற்குச் சான்று பகர்ந்துகொண்டும் இருக்கின்றன. எனவே இந்த உலகம் மற்றும் இவ்வுலகிலுள்ள மனிதர்கள், பிற ஜீவராசிகள், விஷ ஜந்துக்கள் அனைத்தையும் படைத்தவன் அவனே! மரணத்தையும் அழிந்து போகின்ற மற்றும் அழியாத நிரந்தரமான வாழ்க்கையைப் படைத்தவனும் அவனே!

யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூன்று சாராரிடமும் பரிசுத்த வேதங்கள் உள்ளன. அவை அனைத்துமே 'கடவுள் உண்டு; ஆனால் ஒன்று!'

என்ற கருத்திற்கே சாட்சியம் அளிக்கின்றன.

சத்தியத்தைத் தேடுபவர்கள், கடவுள் என்ற தலைப்பில் தூய மனதுடன் புனித வேதத்திலும் சங்கைமிக்க குர்ஆனிலும் விளக்கத்தை ஆராயப் புகுந்தால் இறைவனுடைய தனிப்பட்ட பண்புகளை – அவனல்லாத மக்களால் கடவுளர்களாக நம்பப் படுகின்ற வேறு யாருக்கும் சம்பந்தமில்லாத அந்தத் தன்மைகளை அறிந்துகொள்ளலாம்.

இதோ அத்தகைய பண்புகளிற் சில:

1) உண்மையான இறைவன், படைப் பாற்றல் உள்ளவன்; மாறாக படைக் கப்பட்டவனல்லன்!

2) உண்மையான இறைவன் ஒரே யொருவன்தான்; இணையற்றவன்; ஒன்றுக்குமேற்பட்டவனும் அல்லன்; யாரையும் பெற்றெடுத்த தந்தையா கவோ யாருக்கும் பிறந்த மகனா கவோ அல்லன்!

3) இறைவன், படைப்பினங்களின் உருவ அமைப்பிலிருந்து பரிசுத்தமானவன். எனவே இவ்வுலகில் அவனைப் பார்வைகள் அடையாது.

4) இறைவன், நித்திய ஜீவி; மரணிக்கவேமாட்டான். எந்த மாற்றத்திற்கும் உட்படாதவன்; எந்தப் பரிணாமத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை; படைப்பினங்களில் எந்த உருவத்தையும் மேற்கொள்வதுமில்லை.

5) கர்த்தர் எந்தத் துணையுமின்றி சுயமாக நிலைத்திருப்பவர்; தமது படைப்பினங்களின் தேவையற்றவர்; அவருக்குத் தந்தையோ தாயோ மனைவியோ பிள்ளையோ கிடையாது. உணவோ குடிப்போ பிறரின் உதவியோ தேவையில்லை. ஆனால் அவரால் படைக்கப்பட்ட படைப்பினங்கள் யாவும் அவரின் பால் தேவையுள்ளவையாக உள்ளன.

6) கர்த்தர், கண்ணியம் - பரிபூரணத் துவம் மற்றும் அழகியல் ஆகிய பண்புகளால் தனித்துவமானவர். அவற்றில் யாருக்கும் பங்கில்லை. படைப்பினத்தில் அவருக்கிணையாக யாருமில்லை. ஆக, அவர் ஒப்புவமையற்றவராவார்.

இந்தப் பண்புகளை(யும் கர்த்த ருக்கே உரித்தான மற்ற இலக்கணங் களையும்) உறைகல்லாக்கி கடவுட்க ளாக மக்களால் இன்றைக்குக் கருதப் படுகின்ற அம்சங்களை உரசிப் பார்த்து தகுதியில்லாதவற்றை ஒதுக்கிவிடலாம்.

இனி என்னை, அடிப்படையாக மேலே கூறிவந்த 'ஒரேயொரு தூதுச் செய்தி' பற்றிய ஆய்வை மேற் கொள்ள விடுங்கள். அதற்காக இறை யேகத்துவத்தை உறுதிப்படுத்துகின்ற புனித வேதம் மற்றும் சங்கைமிக்க குர்ஆனின் வசனங்களை நான் எடுத்து வைக்கின்றேன். அதற்கு முன்பு நான் உங்களையும் இந்தக் கருத்தாய்வுக்குள் இணைத்துக்கொள்ள விரும்புகின்றேன்:

சில கிறிஸ்தவச் சகோதரர்கள், 'நிச்சய மாக கர்த்தர் ஒருவரே!' என்பது மிகத் தெளிவான ஒன்றுதானே. அவ்வா றுதான் நாங்கள் விசு வாசம் கொள்கின் றோம்' என்று கூற முன்வரலாம். அப்படி யாயின் இதில் உள்ள பிரச்சினைதான் என்ன?

உண்மையில் கிறிஸ்துவத்தைப் பற்றிய நூற்களை நான் நிறையவே வாசித்துள்ளேன். கிறிஸ்தவ நண்பர்களுடன் அதிகமாகவே உரையாடியுமுள்ளேன். இவற்றின் மூலமாக உண்மையில் நான் விளங்கியது என்னவெனில், அவர்களிடம் (அதாவது அவர்களில் சிலர் விளங்கி வைத்திருப்பதைப் போல) கர்த்தர்,

1) பிதாவாக இருக்கிறார்

2) சுதனாக – மகனாக இருக்கிறார்

3) பரிசுத்த ஆவியாக இருக்கிறார் - என்பதுதான்.

இந்நிலையில் அடிப்படை விவரமும் ஆரோக்கியமான அறிவும் உள்ள ஆராய்ச்சியாளனுக்கு கிறிஸ்தவச் சகோதரர்களிடம் கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்கத் தோன்றும்:

மூன்று கடவுள்களை மேற்கோள் காட்டும் நீங்கள் கூறும் 'கர்த்தர் ஒருவரே!' என்ற கூற்றிற்கு என்ன பொருள்?

ஒரே இறைவன் மூன்றாக பரிணாமம் பெற்றாரா? அல்லது மூன்று இறைவன்கள் ஒன்றாகச் சமைந்துவிட்டனரா? (மூன்றில் ஒன்றா? ஒன்றில் மூன்றா?)

இதற்கும் மேலாக சில கிறிஸ்தவர்களின் கொள்கை, இந்த மூன்று கடவுள்களுக்கும் தனித் தனியான பொறுப்புகள், பல உருவங்கள் உள்ளன என்பதாக அமைந்துள்ளது:

1) பிதா - படைக்கக் கூடியவர்

2) குமாரன் - பாவமீட்சியளிப்பவர்

3) பரிசுத்த ஆவி - ஆலோசனை வழங்குபவர்

இயேசுவை தேவகுமாரன் என்றோ கடவுள் அல்லது கடவுளின் ஒரு பகுதி என்றோ கருதுவது, 'கர்த்தரைப் பார்க்க இயலாது; அவரது பேச்சை யாரும் கேட்டதுமில்லை' என்கிற பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் கொள்கைக்கு முரணானது:

*நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை. (யோவான்: 5:37)*

*மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறவர் (1 தீமோத்தேயு: 6:16)*

*ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார். (யாத்திராகமம்: 33:20)*

இந்த வேதாகம ஆதாரங்களின் அடிப்படையில் உண்மையிலேயே நான் வியந்து கேட்பது என்னவெனில், இயேசுதான் கர்த்தர் என்ற இவர்களின்

கூற்றிற்கும் கர்த்தரைக் கண்டவரோ அவரது சப்தத்தைக் கேட்டவரோ ஒருவருமிலர் என்ற கருத்தை உறுதிப்படுத்துகிற புனித வேதக் கூற்றுகளுக்குமிடையே எங்ஙனம் உடன்பாடு காண இயலும்?

யூதர்களும் இயேசுவின் குடும்பம் மற்றும் சீடர்கள் அனைவரும் அந்தக் காலத்தில் இயேசுவைக் கண்டிருக்கின்றனரல்லவா? அவர்கள், இயேசுவைக் (கர்த்தராக - தேவ குமாரர் என்ற கொள்கை யுடையவர்களின் கருத்துப்படி) காணவில்லையா? அவரது சப்தத்தைக் கேட்கவில்லையா?

பைபிளின் பழைய-புதிய ஏற்பாடுகள் நிச்சயமாக கர்த்தரை யாரும் கண்டதுமில்லை, அவரது சப்தத்தைக் கேட்டதுமில்லை என்று உறுதிபட கூறும்போது யாரை மக்கள் கண்டு, அவரது சப்தத்தைக் கேட்டுமுள்ளார்களோ அந்த இயேசு எப்படி தேவனாகவோ தேவ

குமாரனாகவோ கருதப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியும்? கர்த்தரின் யதார்த்த நிலை சம்மந்தமான வேறு இரகசியமேதுமுண்டா?

நிச்சயமாக பழைய ஏற்பாடு இதற்கு மாற்றமான கர்த்தரின் கூற்றை மேற்கோள் காட்டுகிறது:

*நானே கர்த்தர்; வேறொருவர் இல்லை. நான் அந்தரங்கத்திலும் பூமியின் அந்தகாரமான இடத்திலும் பேசினதில்லை... நான் நீதியைப் பேசி யதார்த்தமானவைகளை அறிவிக்கிற கர்த்தர். (ஏசாயா: 45:18,19)*

அப்படியானால்,

யதார்த்தம்தான் என்ன?

தயை கூர்ந்து மேற்கூறப்பட்ட ஆதாரங்களைப் பல தடவைகள் வாசியுங்கள்! நன்றாக சிந்தனை செய்து பாருங்கள்!

இனி இச்சிறு பிரசுரத்திலுள்ள ஆதாரங்கள், வேத வசனங்கள் ஆகியவற்றை நீங்கள் காய்தல் - உவத்தலின்றி நேர்மையாக நாணயமாக ஆழமாக வாசித்தறிந்த பின் உங்களது கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் எமக்குத் தெரியப்படுத்துவீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் நாம் புனித வேதாகமம் மற்றும் புனித குர்ஆனில் கர்த்தரின் உள்ளமையை ஆய்வு செய்கிற பயணத்தைத் தோடர்வோம்.

இந்தத் தலைப்பையொட்டி
வேதத்திலிருந்து சில ஆதாரங்களை
எந்தவித சொந்த அபிப்பிராயமும்
கூறாமல் சமர்ப்பிக்கின்றேன்.
அவற்றை நீங்கள் மனதிற்குள்
பழைய கருத்துக்கள் எதையும்
வைத்துக் கொள்ளாமல் திறந்த
மனதுடன் தெளிவாகச் சிந்திக்க
வேண்டும் என்று எதிர்பார்க்கவும்
செய்கின்றேன்.

# பரிசுத்த வேதாகமத்தில் {பழைய ஏற்பாட்டில்} கர்த்தர் உண்மையில் ஒருவரே என்பதற்கான சான்றுகள்

- *இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். (உபாகமம் 4:6)*

- *அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? (மல்கியா: 2:15)*

- *நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளா யிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப் பின் இருப்பதும்*

இல்லை. நான் நானே கர்த்தர்; என்னையல்லாமல் இரட்சகர் இல்லை. (ஏசாயா: 43:10,11)

- நான் முந்தினவரும், நான் பிந்தின வருந்தானே; என்னைத் தவிர தேவன் இல்லை. (ஏசாயா :44:6)
- நீதிபரரும் இரட்சகனுமாகிய என் னையல்லாமல் வேறே தேவன் இல்லை; என்னைத் தவிர வேறொ ருவரும் இல்லை. (ஏசாயா: 45:21)

இவை போன்ற
வேறு வசனங்கள் உங்களது
நினைவில் உள்ளனவா?

# பரிசுத்த வேதாகமத்தில் {புதிய ஏற்பாட்டில்} கர்த்தர் உண்மையில் ஒருவரே என்பதற்கான சான்றுகள்

*ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்! (யோவான்: 17:3)*

*உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவனுக்கே ஆராதனை செய்வாயாக! (மத்தேயு: 4:10)*

*இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்... ஒரே தேவன் உண்டு, அவரைத் தவிர வேறொரு தேவன் இல்லை. (மாற்கு: 12:29-33)*

*தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. (1. தீமோத்தேயு: 2:5)*

*அப்பொழுது ஒருவன் வந்து அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும்? என்று கேட்டான். அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; (மத்தேயு: 19:16,17)*

**கர்த்தர் ஒருவர் மட்டுமே; மூவர் அல்லர் - என்ற கருத்தை வலியுறுத்தும் வேறு சான்றுகளைத் தாங்கள் குறிப்பிட இயலுமா?**

# திருமறை குர்ஆனில் 'கர்த்தர் உண்மையில் ஒருவரே!' என்பதற்கான சான்றுகள்

(நபியே?!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். அவன் (எவரையும்) பெறவுமில்லை. (எவராலும்) பெறப்படவுமில்லை. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை. (அல்குர்ஆன்: 112:1-4)

சிறையிலிருக்கும் என் இரு தோழர்களே! வெவ்வேறான பல தெய்வங்கள் இருப்பது நல்லதா? அல்லது (யாவரையும்) அடக்கி ஆளுகின்ற ஒருவனான அல்லாஹ்வா? (அல்குர்ஆன்: 12:39)

நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒருவனே. (அல்குர்ஆன்: 37:4)

அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? (நபியே!) நீர் கூறுவீராக: "நீங்கள் உண்மை

யாளர்களாக இருந்தால், உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்.!" (அல்குர்ஆன்: 27:6)

நிச்சயமாக அல்லாஹ் மூவரில் மூன்றாமவன் என்று கூறியவர்கள் நிராகரிப்பவர்களாக ஆகிவிட்டார்கள். ஏனென்றால் ஒரே இறைவனைத் தவிர வேறு நாயன் இல்லை. அவர்கள் சொல்வதை விட்டும் அவர்கள் விலகவில்லையானால் நிச்சயமாக அவர்களில் நிராகரிப்பவர்களைத் துன்புறுத்தும் வேதனை கட்டாயம் வந்தடையும். இவர்கள் அல்லாஹ்வின் பக்கம் திரும்பி அவனிடம் மன்னிப்புத் தேடமாட்டார்களா? அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும் பெருங் கருணையாளனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன்: 5:73,74)

**உண்மையில் இந்தத் தூதுச் செய்தி (இறையேகத்துவம்)தான் புனிதமிக்க குர்ஆனில் மிக முக்கிய தலைப்பாகும்.**

## முடிவுரை

இந்த வசனங்கள் யாவும் புனித வேதாகமம் மற்றும் புனித குர்ஆனின் நூற்றுக்கணக்கான ஆதாரங்களில் சில. இவையனைத்தும் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிபடுத்தும் செய்தியாவது, கர்த்தர் ஒருவரே, வேறு இறைவன் இல்லை என்பதுதான். ஆம், புனித வேதாகமம் சொல்கிறது: *இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்... ஒரே தேவன் உண்டு, அவரைத் தவிர வேறொரு தேவன் இல்லை. (மாற்கு:12:29-33)*

இறைவனைப் பற்றி குர்ஆன் கூறும்போது,

*(நபியே?!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே. (அல்குர்ஆன்: 112:1)*

புனித வேதம், கர்த்தர் ஒருவரே என்பதை மட்டும் உறுதிப் படுத்தவில்லை. மாறாக, ஆக்குபவரும் அழிப்பவரும் அவரே என்பதையும்

உறுதிப்படுத்துகின்றது: நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளா யிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப் பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் இரட்சகர் இல்லை. (ஏசாயா :43:10,11)

ஆகவே இயேசுவைக் கடவுள் என்றோ பரிசுத்த ஆவி என்றோ கூறுவதற்கு எந்த முகாந்திரமோ சான்றோ இல்லை என்பது தெளிவாகின்றது. அவர்கள் இறைப்படைப்புக்களில் உள்ளவர்களே அன்றி வேறல்லர். அவர்களுக்கு இறைக்கோட்பாட்டில் யாதொரு பங்குமில்லை. மேலும் அவர்கள் கடவுளர்களோ கடவுளின் வெளிப்பாடுகளோ உருவகங்களோ மாதிரி வடிவங்களோ இல்லை. புனித

வேதாகமும் புனித குர்ஆனும் சொல்வதைப்போல அவரைப் போன்று யாரும் எதுவுமில்லை.

மேலும் கர்த்தர், யூதர்களின் மீது கோபப்படுவதற்கான காரணம் கர்த்தரை விட்டுவிட்டு பலதெய்வ கொள்கையை மேற்கொண்டு வழிகெட்டுப் போனதுதான்.

...அதனால் இஸ்ரவேலர் மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது. (எண்ணாகமம்: 25:3) மோஸேயும் அவர்களின் தங்கத்தாலான காளை மா(ட்டின் வழிபா)ட்டைத் தகர்த் தெறிந்தார்.

மறுபுறம், கிறிஸ்தவர்களின் ஏகத்துவச் சிந்தனையுள்ள ஒரு சாரார் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். காரணம், அவர்கள் இறைவனை ஏகத்துவப் படுத்தி விசுவாசித்து இயேசு வழங்கிய (ஏகத்துவ) அறிவுரையை மாற்றி அமைப்பதை ஏற்க மறுத்தது

மட்டுமின்றி பவுல் மற்றும் அவரைப் பின்பற்றியவர்களின் மூலம் உருவாக் கப்பட்ட திரித்துவக் கொள்கையை எதிர்த்ததும்தான்.

**சொல்ல வந்த கருத்து சுருக்கமாக:**

கர்த்தர், ஆதாம், நோவா, ஆபரஹாம், மோஸே, இயேசு, முஹம்மத் மற்றுமுள்ள அனைத்து இறைத் தூதர்களையும் *(அவர்கள் அனைவர் மீதும் இறைவனின் சாந்தியும் சமாதானமும் நிலவட்டுமாக!)* கர்த்தரை ஏக இறைவனாக விசுவாசம் கொள்தல், அவரையே வணங்கி அவருக்கு யாரையும் எதையும் இணையாகக் கருதாமலிருத்தல் ஆகிய கொள்கை களின்பால் மக்களை அழைப்பதற்காக தேர்ந்தெடுத்துள்ளான். ஆக அவர்கள் அனைவரின் தூதுச் செய்தியும் ஒன்றேதான்:

உண்மையான கர்த்தர் ஒருவர் மட்டுமே! அவரையே நீங்கள் வழிபடுங்கள்!

இறைத்தூதர்கள் அனைவரின் தூதுச்செய்தியும் ஒன்றேதான் என்பது உறுதியாகிவிட்டதால் அவர்களின் மார்க்கமும் ஒன்றாகத்தானிருக்கும். அவ்வாறாயின் அவர்கள் அனைவருடையவும் அந்த மார்க்கம்தான் என்ன?

இறைத்தூதர்களின் அந்தத் தூதுச் செய்தியின் அடிப்படை, இறைவனுக்கு நம்மை ஒப்புக் கொடுப்பது என்ற வகையில் அமைந்துள்ளது. அந்தக் கருத்தை வெளிப்படுத்தும் அரபி மொழி வார்த்தைதான் இஸ்லாம்.

நிச்சயமாக இஸ்லாம்தான் அனைத்து இறைத்தூதர்களுடைய உண்மையான மார்க்கம் என்பதையே புனித குர்ஆன் உறுதிபடக் கூறுகிறது. புனித குர்ஆன் கூறும் இந்தக் கருத்தின் உண்மையை புனித வேதாகமத்தில் கூட நீங்கள் உரசிப் பார்க்கலாம். ***(இந்த உண்மை, புனித வேதாகமத்தோடு ஒத்துப்போகின்றதா என்பதை எமது அடுத்த பிரகரத்தில் - இறைவன் நாடினால் பார்க்கலாம்).***

இறுதியாக...

மனித குல விடுதலைக்கு இந்த தூதுச் செய்தியை ஏற்றாக வேண்டும். இத்தோடு அனைத்து இறைத்தூதர் களையும் விசுவாசம் கொள்ளவும் வேண்டும். அதில் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றிய நம்பிக்கை கொள்வதும் அவர்களின் வழிகாட்டு தலைப் பின்பற்றுவதும் அதன் பிரகாரம் செயல்படுவதும் அடங்கும். நித்திய ஜீவனை அடைவதற்கு இதுவே வழியாகும்.

மனத்தூய்மையுடன் உண்மை யைத் தேடும் வேட்கை உள்ளவர்களே! நீங்கள் சந்தர்ப்பங்கள் நழுவுவதற்கு முன்னால் - திடீரென்று சம்பவிக்கும் மரணம் ஏற்படுவதற்கு முன்னால் - இந்த விஷயம் பற்றி நன்கு சிந்திக்க வேண்டும். ஏனெனில் அது எப்போது நிகழும் என்பது யாருக்குத் தெரியும்?

சீரிய அறிவோடும் நேரிய உள்ளத்தோடும் முழுமையாக

சிந்தித்ததன் பின்னால் நிச்சயமாக கர்த்தர் ஒருவரே அவருக்கு யாதொரு இணையும் இல்லை, அவருக்கு குழந்தையோ கிடையாது என்ற உறுதிப்பாடு ஏற்பட்டுவிட்ட பிறகு அவரை விசுவாசம் கொண்டு அவரை மட்டுமே வணங்கவும் வேண்டும். அப்போது முஹம்மத் (ஸல்) அவர்களை நோவா, ஆப்ரஹாம், மோஸே, இயேசு ஆகிய இறைத் தூதர்களைப் போல இறைத்தூதர் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இப்போது நீங்கள், மனதார விரும்பினால், இவ்வாசகத்தைக் கூறுங்கள்:

**அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் (வணக்கத்திற்கு உண்மையில் தகுதியானவர் கர்த்தராகிய அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் அவர்கள் கர்த்தரின் தூதர் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன்).**

இதுவே நித்திய ஜீவனை நீங்கள் அடைவதற்கான வழியில் நீங்கள் எடுத்து வைக்கும் முதல் அடி. இதுவே சுவனவாயில்களைத் திறப்பதற்கு உண்மையான திறவுகோல்.

இந்த வழியைத் தேர்ந்தெடுக்க நீங்கள் நாடிவிட்டால் ஒரு முஸ்லிம் நண்பரையோ பள்ளிவாசலையோ இஸ்லாமிய நிலையத்தையோ அணுகுங்கள்! அல்லது தொலைபேசி மூலமாகவோ தபால் மூலமாகவோ எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்! (அதனால் நான் பாக்கியம் பெற்றவனாவேன்!)

“எனது அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்புமீறி தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய அருளில் அவர் நம்பிக்கையிழக்க வேண்டாம் - நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான் - நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன் மிக்கக் கருணையுடையவன்” (என்று நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக.

ஆகவே (மனிதர்களே!) உங்களுக்கு வேதனை வரும் முன்னரே நீங்கள், உங்கள் இறைவன்பால் திரும்பி, அவனுக்கே முற்றிலும் வழிபடுங்கள். (வேதனை வந்துவிட்டால்) பின்பு நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள். *(39:53, 54)*

***கடைசிச் சிந்தனை:***

இந்தப் பிரசுரத்தை மிகவும் கவனமாக வாசித்த பின்பு உண்மையாளர்கள் கேட்கும் கேள்விகள் இவைதான்:

- *யதார்த்தம்தான் என்ன?*
- *தவறுதான் என்ன?*
- *இனி செய்ய வேண்டியது என்ன?*

இந்தக் கேள்விகளைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் எமது அடுத்தடுத்த நூற்களில் - அல்லாஹ் நாடினால் - அலசலாம்.